

கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம், காட்டுமன்னார்கோவில்,பெருந்தலைவர் எம்.ஆர்.கே கலையரங்கத்தில்,தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது. கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர்கள் ஏ.அங்கையற்கன்னி, விஜயன்ராகவன்,சுவை.சுரேஷ், எம்.எம்.சிவா,அ.பாரிபாலன், முன்னாள் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சரும், மாவட்ட கழக செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் மாவட்ட, மாநகர ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## நாமக்கல் மாவட்ட விளையாட்டரங்கில்

# ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டில் நவீன உடற்பயிற்சிக் கூடம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டு விளையாட்டு வீராங்கனைகளுடன் கலந்துரையாடினார்!

நாமக்கல், ஜூலை 11-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாமக்கல் மாவட்ட விளையாட்டரங்கில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் 40.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நவீன உடற்பயிற்சி கூடத்தை பார்வையிட்டு, விடுதியில் தங்கியுள்ள விளையாட்டு வீராங்கனைகளுடன் கலந்துரையாடினார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றது.

விளையாட்டு வீரர்கள் சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ளவும், வெளிநாடுகளுக்கு சென்று பயிற்சி பெறவும், அதிநவீன உயர்தர விளையாட்டு உபகரணங்களை வாங்கவும், தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையை உருவாக்கி நிதியுதவி அளித்து வருகின்றது.

மேலும், சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையை வழங்கி வருகின்றது.

கிராமங்களில் அனைத்து ஊராட்சிகளிலும் விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டத்தின் மூலமாக பல்வேறு விளையாட்டுப் பொருட்களை வழங்கியுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் உள்ள விளையாட்டு விடுதிகளில் தங்கி பயிற்சி பெறும் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கான தினசரி உணவு படியினை உயர்த்தி வழங்கி வருகின்றார். விளையாட்டு விடுதி வீரர், வீராங்கனைகளுக்கு தினசரி பயிற்சி மேற்கொள்ளவும், ஒட்டுமொத்த செயல் திறன் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கும் நவீன பை, ஸ்மார்ட் வாட்ச், வெப்பநிலையை சீராக பராமரிக்கும் குடுவை (தெர்மோவாட்டர் பாட்டில்), சூடு / ஐஸ் ஒத்தட பை, தொப்பி, கைத்துண்டுகள், மைக்ரோபைபர் துண்டு, குவளை / கோப்பை ஆகியவை அடங்கிய தொகுப்பினை வழங்கியுள்ளார்.

தமிழ்நாட்டில் செஸ் ஒலிம்பியாட், இரவு நேர சாலை பந்தய கார் போட்டி, ஹாக்கி போட்டி உள்ளிட்ட பல்வேறு முக்கிய விளையாட்டு போட்டிகளை நடத்தி விளையாட்டு வீரர், வீராங்கணைகளுக்கு தன்னம்பிக்கையையும், உற்சாகத்தையும் அளித்து வருகின்றார்.

மேலும், அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் உள்ள விளையாட்டு விடுதிகளுக்கு நேரடியாக சென்று கள ஆய்வு மேற்கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களை சாதிக்கும் வகையில் உத்வேகம் அளித்து வருகின்றார்.

நாமக்கல் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பெண்கள் விளையாட்டு விடுதியில் 34 மாணவிகள் கால்பந்து விளையாட்டு பயிற்சி பெற்று வருகின்றார்கள். 25 மாணவிகள் கபடி விளையாட்டு போட்டியில் பயிற்சி பெற்று வருகின்றார்கள்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்அவர்கள் இன்று (10.7.2025) நாமக்கல் மாவட்ட விளையாட்டரங்கில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் 40.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நவீன உடற்பயிற்சி கூடத்தை பார்வையிட்டு, விடுதியில் தங்கியுள்ள விளையாட்டுவீராங்கனைகளுடன் கலந்துரையாடினார். இந்த கலந்துரையாடலின்போது விளையாட்டுவீராங்கனைகள் மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்குபெற்றது குறித்தும், அவர்கள் வென்ற பதக்கங்கள், கோப்பைகள் குறித்தும் கேட்டறிந்து, மேலும், பல சாதனைகள் புரிய வாழ்த்துகளை தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே. ஆர்.என்.இராஜேஸ்குமார், கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ. ராமலிங்கம், கு. பொன்னுசாமி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி துர்காமூர்த்தி, மாநகராட்சி மேயர் து.கலாநிதி உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சீர்காழி வை. ஞானசேகரன்

ஜூலை 11 (2014)



அண்ணாமலைப் பல்கலை கழகத்தில் தமிழ்ப் பெருமன்ற செயலாளராக – மாணவர் திராவிட கழகத் தலைவராகவும் இருந்தபோது மாணவர்களை ஒருங்கிணைத்து தமிழின உணர்வு பொதுக்கூட்டம் தமிழீழ ஆதரவு பொதுக்கூட்டங்களை தொடர்ந்து நடத்தியதோடு, முதன்முதலாக தந்தை பெரியார் படத்தை திறந்து வைத்தவர்.

ஈழத் தமிழர்களுக்காக நடைபெற்ற அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றவர்.

கீழத் தஞ்சை மாவட்ட தி.க. செயலாளராக இருந்தபோது, ஈழத் தமிழர்களுக்கு மயிலாடுதுறையில் மிகப் பெரிய மாநாட்டை நடத்தியவர்.

அண்ணாமலைப் பல்கலை கழகத்தில் படிக்கும்போது மிசாவை கடுமையாக எதிர்த்து மாணவர்களிடம் துண்டறிக்கை வழங்கியவர்.

சீர்காழி ஒன்றிய பெருந்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, 'கலைஞர் செம்மொழி நூலகம்', 'தளபதி மு.க.ஸ்டாலின் சிறுவர் விளையாட்டரங்கம்' ஆகியவற்றை அமைத்து, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்

தலைமைக் கழகம்
தி.மு.க.

## கல்லூரிகள் தோறும் அமைக்கப்பட்டுள்ள

# தமிழ் மாணவர் மன்ற உறுப்பினர்களை அதிகரிப்போம்!

## கழக மாணவரணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஜூலை 11

தமிழ்நாட்டில் கல்லூரிகள் தோறும் அமைக்கப்பட்டுள்ள தமிழ் மாணவர் மன்றங்களை விரிவுபடுத்தவும், உறுப்பினர்களை அதிகரிக்கவும் தி.மு.க. மாணவரணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நாடாளுமன்ற உறுப்பினர், கழகத் துணைப் பொதுச்செயலாளர், கழக மாணவர் அணிப் பொறுப்பாளர் ஆ.ராசா தலைமையில், இணை அமைப்புச்செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின், தலைமை நிலைய அலுவலகச் செயலாளர் பூச்சி எஸ்.முருகன், மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி முன்னிலையில் "கல்லூரிகள் தோறும் கழக மாணவர் மன்றத்தை கட்டமைப்பது தொடர்பாக" கழக மாணவர் அணி மாநில நிர்வாகிகள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி. கோகுல், திருமதி பூர்ண சங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ. வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் ஆகியோர் உடனான ஆலோசனைக் கூட்டம் நேற்ற சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

**தீர்மானம் – 1**

தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளின் கீழ் பிறபடுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகள், ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகள் என்ற பெயர்களில் இயங்கி வரும் வரும் ஏழை மாணவர்களுக்கான பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் இனி 'சமூக நீதி விடுதிகள்' என்ற பொதுப் பெயரால் இனி அழைக்கப்படும் என அறிவித்திருக்கும் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு மாணவர் அணி சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த அறிவிப்பு சமூகத்தில் நிலவும் சாதி வேறுபாடுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் முற்றிலுமாக விலக்கும் திராவிட மாடல் அரசின் பயணத்தில் முக்கியமான மைல் கல்லாக அமைந்துள்ளது. மேலும், "இளம் சந்ததியினர் அனைவரும் சாதி வேறுபாடின்றி ஒன்றிணைந்து, எதிர்கால தமிழ்ச் சமுதாயத்தை, சமத்துவச் சமுதாயமாகக் கட்டமைத்திட இந்த அறிவிப்பு அடித்தளம் அமைக்கும். சமூக நீதி, சமநீதி, சட்ட நீதி ஆகியவை அனைவர்க்கும் பொது என்ற நிலையை உருவாக்க திராவிட மாடல் அரசு தொடர்ந்து பங்காற்றும்" என்ற முதல்வரின் அறிவிப்புக்குப் பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**தீர்மானம் – 2**

கழகத் தலைவர் அவர்கள் 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற பெயரில், வாக்குச்சாவடிதோறும் 30 சதவீதம் வாக்காளர்களை தி.மு.க. உறுப்பினர்களாக்கும் இயக்கத்தை முன்னெடுத்துள்ளார்கள். ஒன்றிய அரசு மும்மொழிக் கொள்கை என்ற ஏமாற்றுக் கொள்கையை தமிழ்நாட்டிற்குள் திணிக்க எத்தனிக்கிறது. தமிழ் செம்மொழிக்கு குறைவான நிதி ஒதுக்கி சிறுமைப்படுத்தும் வேளையில், மக்களை மதவாதத்தின் அடிப்படையில் பிளவுபடுத்த நினைக்கும் வேளையில், தமிழர்கள் அனைவரும் சாதி, மதம், ஊர், நிலம் என அனைத்து வேறுபாடுகளையும் கலைந்து ஓரணியில் நிற்க வேண்டிய தேவை உள்ளது. இதற்காகக் கழகத் தலைவர் அவர்கள் முன்னெடுத்துள்ள ஓரணியில் தமிழ்நாடு என்ற மக்கள் இயக்கத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் உள்ள கல்லூரிகள் மற்றும் பட்ட மேற்படிப்பு நிறுவனங்களில் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தின் நோக்கத்தை வலியுறுத்தி துண்டுப் பிரசுரம் மூலம் பிரசாரம் மேற்கொள்வது என முடிவு செய்யப்படுகிறது.

**தீர்மானம் – 3**

1944ஆம் ஆண்டு திருவாரூரில் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம் உருவாக்கி அதற்கு தலைவர் ஆனவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இந்த அமைப்பின் மூலமாக தன்னுடன் பயிலும் சக மாணவர்களை அழைத்துக்கொண்டு இந்தி திணிப்பிற்கு எதிராக போராடியதோடு 16 வயதிலேயே 'மாணவர் நேசன்' என்ற பத்திரிகையையும் துவங்கி அதை வெற்றிகரமாக நடத்தியவர். மேலும் மாணவர் மன்றங்கள் மூலம் தமிழின் தொன்மையோடு, பகுத்தறிவு, சுயமரியாதை, சமூக நீதி, சமத்துவம் போன்ற கொள்கைகளையும் மாணவர்களிடையே பரப்புரை செய்து இளைஞர்கள் இடையே மிகப்பெரிய அரசியல் எழுச்சியை உருவாக்கியவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியொட்டி, கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின் பேரில், இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில் தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகள் தோறும் தமிழ் மாணவர் மன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அம்மன்றங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதையும் விரிவுபடுத்துவதையும், புதிய மாணவர்களை மன்றங்களில் உறுப்பினர்களாகச் சேர்ப்பதையும் விரைவுபடுத்த வேண்டும் என மாணவர் அணி தீர்மானிக்கிறது.

**தீர்மானம் – 4**

1959ஆம் ஆண்டு அமலுக்கு வந்த இந்து சமய அறநிலையத்துறைச் சட்டத்தில் கோவில்களுக்குக் காணிக்கையாக வரும் நிதியில் இருந்து கல்வி நிலையங்கள் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்விப் பணியை பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் தொடங்கி எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா உட்பட அனைத்துத் தலைவர்களும் செய்து வந்துள்ளனர். அந்தப் பணியை முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் அரசு இன்னும் கூடுதலாக மேம்படுத்தி, ஏழை, எளிய மாணவர்களுக்கும் கல்வி கிடைப்பதை உறுதி செய்திருக்கி றார். வரலாறும் தெரியாத, கொள்கையும் புரியாத எடப்பாடிப் பழனிச்சாமி தனது தற்குறித்தனத்தை வெளிப்படுத்தும் வகையில் அறநிலையத்துறையின் நிதியில் ஏன் கல்வி நிலையங் களைக் கட்டுகிறார்கள் எனக் கேட்டு தான் ஒரு பா.ஜ.கவின் அடிவருடி என்பதைப் அம்பலப்படுத்திக்கொண்டிருக்கிறார். அறநிலையத் துறை சார்பில் கல்லூரிகள் கட்டுவதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்விக் கனவைச் சிதைக்கும் அயோக்கியத்தனத்தில் இறங்கியிருக்கும் எடப்பாடி பழனிசாமிக்கு கழக மாணவர் அணியின் சார்பில் வன்மையான கண்டனங்கள் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.



சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழக மாணவர் அணி சார்பில் கல்லூரிகள் தோறும் தமிழ் மாணவர் மன்றம் அமைப்பது தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலைய அலுவலகச் செயலாளர் பூச்சி முருகன், மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி – மாநில நிர்வாகிகள் பங்கேற்றனர்.



மாங்காடு நகர திமுக இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்க்கை விளக்கம் தெருமுனை கூட்டம் நகர இளைஞரணி அமைப்பாளர் ஆர்.சாரதி எம்.சி. தலைமையில் நடைபெற்றது. இதில் தலைமை கழக சொற்பொழிவாளர் சென்னை அரங்கநாதன், கழக இளம் பேச்சாளர் நா.அருண், நகர கழக செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், எம்.எஸ்.மகேந்திரன், ஜி.எம். வில்லியம்ஸ், ஆர்.சுசீலா, கே.ஜி.சங்கர், மற்றும் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் வார்டு கழக செயலாளர்கள் நகர மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பெரி. அழகு

ஜூலை 11 (1997)



கழகம் துவங்கிய காலத்திலிருந்தே கழகப் பணியாற்றியவர். திருப்பத்தூர் தொகுதியின் வட்டச் செயலாளராக பல ஆண்டுகளாகப் பணியாற்றியவர். பின்பு இராமநாதபுரம் மாவட்டப் பொறுப்பாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

சிவபுரிபட்டி ஊராட்சித் தலைவராகவும், சிங்கம்புணரி ஒன்றியப் பெருந்தலைவராகவும் பணியாற்றி மக்களிடம் நற்பெயர் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதுடன், குறிப்பாக இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும் – மிசா கைதியாக ஓராண்டு காலம் மதுரை மத்திய சிறையில் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.